

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.10.2025) பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலக கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் அமைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய எல்.ஈ.டி. மின்னணு திரைகள் மூலமாக நகரின் பல்வேறு சுரங்கப்பாதைகளில் போக்குவரத்து சீராக நடைபெறுவதையும், மழையளவு விவரங்களையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி உள்பட மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

### வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள

# சென்னை மாநகராட்சியின் கண்காணிப்புப் பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!

### அமைச்சர் கே.என்.நேரு – மேயர் பிரியா – உயரதிகாரிகள் பங்கேற்றனர்!

சென்னை, அக். 16 -

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் மேற்கொள்ளப் படும் கண்காணிப்பு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.10.2025) பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப் பட்டுள்ள கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் மேற்கொள்ளப்படும் கண் காணிப்பு பணிகளை நேரில் பார்வை யிட்டு ஆய்வு செய்தார்.

கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில், பொதுமக்களிடமிருந்து சமூக வலைதளங்கள் மற்றும் தொலை பேசி எண்ணிற்கு வரப்பெற்ற புகார்கள் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவ டிக்கைகள் குறித்த விவரங்களை கணி னிகளில் பார்வையிட்டு ஆய்வு செய்தது டன், 1913 என்ற உதவி எண்ணிற்கு பொதுமக்களிடமிருந்து வரும் புகார் களை நேரடியாக கேட்டறிந்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலக கட்டளை மற் றும் கட்டுப்பாட்டு மையத்தில் அமைக் கப்பட்டுள்ள மிகப்பெரிய எல்.ஈ.டி திரை கள் மூலமாக நகரின் பல்வேறு இடங்களில் உள்ள 22 சுரங்கப்பாதை களில் போக்குவரத்து சீராக நடைபெறு வதையும், பெருநகர சென்னை மாநக ராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இன்று காலை 9.00 மணி வரை கடந்த 24 மணி நேரத்தில் சராசரியாக 38.19 மி. மீட்டர் மழை பெய்துள்ளதையும், அதிக பட்சமாக எண்ணூரில் 136.50 மி.மீட் டர் பெய்துள்ளதையும், குறைந்தபட்ச மாக அம்பத்தூரில் 0.30 மி.மீட்டர் மழை பெய்துள்ள விவரங்களையும் துணை முதலமைச்சர் மின்னணு திரையில் பார்வையிட்டார். மேலும், மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு கால் வாய்களில் மழை நீர் தடையின்றி செல் வதையும், நேப்பியர் பாலம் அருகில் உள்ள முகத்துவாரத்தில் நீர் தடை யின்றி கடலுக்கு செல்வதையும் பார் வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மேற் கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாட்டு பணி களின் விவரங்கள் குறித்து நகராட்சி நிர் வாகத் துறை அமைச்சர், மாநகராட்சி மேயர், மாநகராட்சி ஆணையர் ஆகி யோரிடம் கேட்டறிந்தார்.

அதற்கு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர், கே.என்.நேரு மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் மற்றும் ஆணை யர் ஆகியோர் பதில் தெரிவிக்கையில், வடகிழக்கு பருவமழையை எதிர்கொள் ளும் வகையில் சென்னை பெருநகர மாநகராட்சி பகுதிகளில் மழைநீர் தேங் கும் இடங்களில் மழைநீரை வெளியேற் றும் வகையில் 100 ஹெச்.பி திறன் கொண்ட 150 மோட்டார் பம்புகள், டிராக் டர் மேல் பொருத்தப்பட்ட 500 மோட்டார் பம்புகள் உள்பட பல்வேறு திறன் கொண்ட 1,436 மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன.

பல்வேறு கால்வாய்களில் பணிகள் மேற்கொள்வதற்காக 2 ஆம்பிபியன் கள், 3 ஆம்பிபியன் எஸ்கவேட்டர்கள், 6 ரோபோடிக் எஸ்கவேட்டர்கள், 3 மினி ஆம்பிபியன்கள், 7 சூப்பர் சக்கர் வாக னங்கள், 15 மரக்கிளை அகற்றும் சக்தி மான் வாகனங்கள், உட்பட மொத்தம் 478 வாகனங்கள் மற்றும் இயந்திரங்க ளும், 489 மர அறுவை இயந்திரங்க ளும் தயார் நிலையில் உள்ளன.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகு திகளில் கடந்த நான்காண்டுகளில் 1,217 கிலோ மீட்டர் நீளத்திற்கு மழை நீர் வடி கால்கள் கட்டப்பட்டுள்ளன, இதுவரை 1,136 கிலோமீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய்களும், 1 லட்சத்து 6 ஆயி ரம் வண்டல் வடிகட்டி தொட்டிகளும் தூர்வாரப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 193 இடங்களில் நிவாரண மையங்களும், நிவாரண மையங்க ளுக்கு உணவு வழங்க 150 மைய சமையல் கூடங்களும் தயார் நிலையில் உள்ளன. மழைக்காலத்தினை முன் னிட்டு, மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்திட ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது. தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களை மீட்டு நிவாரண மையங் களில் தங்க வைப்பதற்காக மாநகராட் சிக்கு சொந்தமான 36 படகுகள் உள்பட 103 படகுகள் தயார் நிலையில் உள்ளன.

பருவமழை கால பணிகளில் மாநக ராட்சியைச் சேர்ந்த அலுவலர்கள், பொறியாளர்கள், பணியாளர்கள், தூய் மைப் பணியாளர்கள் உள்ளிட்ட 22 ஆயிரம் பேர் ஈடுபட்டுள்ளனர்.

சென்னை குடிநீர் வாரியம் சார்பில் 15 மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் 2,149 களப்பணியாளர்கள் குடிநீர் வழங் கல் மற்றும் கழிவுநீரகற்றும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் 299 தூர்வாரும் இயந்திரங்கள். 73 அதிவேக கழிவுநீர் உறிஞ்சும் வாகனங்கள். 298 ஜெட்ராடிங் வாகனங்கள், பிற மாவட்டங் களில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ள 45 கழிவுநீர் ஊர்திகள் என மொத்தம் 642 கழிவுநீர் அகற்றும் இயந்திரங்கள் கழிவுநீர் அகற்றும் பணிக்காக தயார்நி லையில் வைக்கப்பட்டுள்ளன என்று துணை முதலமைச்சர் அவர்களிடம் தெரி வித்தனர்.

இந்த ஆய்வின்போது, பொதுமக்கள் அளிக்கும் புகார்களுக்கு உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்வதுடன், புகா ரின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து, சம்மந்தப்பட்ட நபருக்கு தெரி விக்குமாறும், அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஒருங்கி ணைந்து அர்ப்பணிப்பு உணர்வுடன் வடகிழக்கு பருவமழை பணிகளை மேற்கொள்ளுமாறும் துணை முதல மைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, நகராட்சி நிரு வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, துணை மேயர் மு. மகேஷ்குமார், ஆணையர் ஜெ.குமரகுரு பரன், துணை ஆணையர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி உள்பட மாநக ரட்சி அலுவலர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் 6 மாவட்டங்களில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்பு!

## வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, அக். 16 -

தமிழ்நாட்டில் 6 மாவட் டங்களில் இன்று மிக கனம ழைக்கு வாய்ப்பு உள்ள தாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித் துள்ளது. இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கை யில்; மயிலாடுதுறை, திரு வாரூர், நாகை, தஞ்சை, புதுக்கோட்டை, ராமநாத புரம் மாவட்டங்களில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்பு உள்ளது. கடலூர், திண்டுக்கல், தேனி, மதுரை, சிவகங்கை, விருதுநகர், தென்காசி, தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று கனமழை வாய்ப்பு உள் ளது. தேனி, தென்காசி, நெல்லை, ராமநாதபுரம் மாவட்டங்களில் நாளை மிக கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

சென்னை, திருவள்ளூர், காஞ்சி, செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்கு றிச்சி, கடலூர், மயிலாடு துறை, திருவாரூர், நாகை, தஞ்சை, புதுக்கோட்டை, கடலூர், சிவகங்கை, விரு துநகர், தூத்துக்குடி, கன்னி யாகுமரி, மதுரை, திண்டுக் கல், திருப்பூர், கோவை, ஈரோடு, நீலகிரியில் நாளை கனமழைக்கு வாய்ப்பு உள் ளது. தமிழ்நாட்டில் நாளை மறுநாள் 8 மாவட்டங்க ளில் மிக கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

மதுரை, சிவகங்கை, விருதுநகர், ராமநாதபுரம், தென்காசி, கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் நாளை மறுநாள் மிக கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், தேனி, மயிலாடுதுறை, திரு வாரூர், நாகை, தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட் டங்களில் நாளை மறுநாள் கனமழைக்கு வாய்ப்பு உள் ளது. சென்னையில் இன்று நகரின் ஒரு சில இடங்க ளில் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளது என்று தெரிவித்துள்ளது.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (14.10.2025) அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் முன்னிலையில் தமிழ்நாட்டில் முதற்கட்டமாக, 2025 – 2026 நிதியாண்டில் 10 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் தானியங்கி ஓட்டுநர் தேர்வு மையங்கள் அமைத்தல் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை மற்றும் மாருதி சுசுகி இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், போக்குவரத்துத் துறை ஆணையர் இரா. கஜலட்சுமி, மாருதி சுசுகி இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தருண் அகர்வால், ஆகியோர் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.10.2025) பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில், 1913 என்ற உதவி எண்ணிற்கு பொதுமக்களிடமிருந்து வரும் புகார்களை கேட்டறிந்தார். இந்நிகழ்வில் அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி உள்பட மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

### சென்னை, தேனாம்பேட்டை – சைதாப்பேட்டை மேம்பாலப் பணிகள்!

# நள்ளிரவில் பொருத்தப்பட்ட இரும்பு உத்திரங்கள்!

## அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு!

சென்னை, அக்.16 -

சென்னை, அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க அரசு திட்டமிட்டு, தேனாம் பேட்டை முதல் சைதாப் பேட்டை வரை, மேம்பா லம் கட்டும் பணியைத் துவக்கி, தற்போது, கட்டு மானப் பணிகள் நடை பெற்று வருகின்றன.

இந்த மேம்பாலத்தில் இரும்பு உத்திரங்கள் பொருத்தும் பணிகள், போக்குவரத்துக்கு இடை யூறு இல்லாமல் மேற் கொள்ள வேண்டும் என்ற அமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, 13.10.2025 அன்று நள்ளிர வில் பணிகள் தொடங்கி யது. அமைச்சர் அவர்கள் பணித் தளத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு, ஆலோசனைகளை வழங்கி னார். 3.20 கி.மீ. நீளமு டைய இந்த மேம்பாலத் தில் அடித்தளப் பணிகளும், இரும்புத் தூண்கள் அமைக் கும் பணிகளும் ஏற்கெ னவே நிறைவுபெற்ற நிலை யில், மேம்பாலக் கட்டு மானத்தில் மிக முக்கிய மான கட்டமாக கருதப்ப டும் இரும்பு குறுக்கு உத்தி ரங்கள் (Steel Cross Girder) பொருத்தும் பணி நேற்று, நள்ளிரவில் தொடங்கியது. ஒவ்வொரு உத்திரமும் 22 டன் எடையுடையது. குறுக்கு உத்திரம் (Cross Girder) 9 டன் எடை கொண்டது.

ஒரு பாலக்கண்ணுக்கு (Span) 5 உத்திரங்கள் மற் றும் 2 குறுக்கு உத்திரங்கள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒரு பாலக்கண்ணில் மொத் தம் 110 டன் எடையுள்ள இரும்பு கட்டமைப்பு அமைக்கப்படும். இவ்வளவு பருமனான இரும்பு உத்தி ரங்களை தூக்கு வதற்காக 150 டன் கொள்ளளவு கொண்ட உயர்திறன் கிரேன் கள் பயன்படுத்தப்பட்டு வெற்றிக்கரமாக பொருத்தப் பட்டு வருகின்றன.

இப்பணிகளின் முன் னேற்றத்தை பொதுப்பணி கள், நெடுஞ்சாலைகள் மற் றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நள்ளிரவில் பணித்தளத்தில் நீண்டநேரம் பார்வை யிட்டார்.

இந்த உயர்மட்ட மேம் பாலப் பணிகள் நிறைவு பெற்றவுடன் தேனாம் பேட்டை - சைதாப் பேட்டை இடையே யான போக்குவரத்து நெரிசல் குறையும். வாகனங்கள் விரைவாக செல்வதுடன் பயண நேரம் குறையும்.

அமைச்சர் நேரடி ஆய் வின்போது, நெடுஞ்சா லைத்துறை தலைமை பொறியாளர் (கட்டுமா னம் மற்றும் பராமரிப்பு) கு.கோ.சத்தியபிரகாஷ், நெடுஞ்சாலைத்துறை சிறப்பு தொழில்நுட்ப அலு வலர் இரா.சந்திரசேகர், கண்காணிப்புப் பொறியா ளர் வி.சரவணசெல்வம் மற்றும் ஒப்பந்த நிறு வனத் தினர் உடனிருந்தனர்.

# பெரம்பலூரில் இருந்து சென்னை செல்ல குளிர்சாதன பேருந்து வசதி!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், அக்.16-

பெரம்பலூரில் இருந்து சென்னை செல்லும் வகை யில் குளிர் சாதனவசதி யுடன் கூடிய பேருந்து சேவையினை போக்கு வரத்து மற்றும் மின்சா ரத் துறை அமைச்சர் சா.சி.சிவ சங்கர் புதிய பேருந்து நிலை யத்திலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ந.மிருணாளினி தலைமை யில், பெரம்பலூர் சட்ட மன்ற உறுப்பி னர் ம. பிரா பகரன் முன்னிலையில் தொடங்கி வைத்தார்.

இப்பேருந்தானது தினந்தோறும் மாதவரம் பேருந்துநிலையத்திலிருந்து மதியம் 12.30 மணிக்கு புறப்பட்டு கிளாம்பாக்கம், மேல்மருவத்தூர், திண்டிவ னம், விழுப்புரம், உளுந் தூர்பேட்டை வழியாக மாலை 7.15 மணிக்கு பெரம்பலூர் பேருந்து நிலையம் வந்தடையும்

பெரம்பலூர் பேருந்து நிலையத்திலிருந்து இரவு 8.15 மணிக்கு புறப்பட்டு அதிகாலை 3.00 மணிக்கு மாதவரம் சென்றடையும். இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் நகர் மன்ற தலைவர் திருமதி அம்பிகா ராஜேந்திரன், தமிழ்நாடு அரசு போக்கு வரத்துக்கழக கும்பகோணம் லிட் மேலாண்மை இயக்கு நர் தசரதன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக விழுப்புரம்லிட் மேலாண்மை இயக்குநர் குணசேகரன், திருச்சி மண்டல பொதுமே லாளர் சதீஷ்குமார், விழுப் புரம் மண்டல பொதுமேலா ளர் ஜெய்சங்கர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

நாகர்கோவில், அக். 16 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், பேரூர், மாநகர வட்டக் கழக செயலாளர்கள் மற் றும் மாவட்ட, நாகர்கோ வில் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் ஆலோச னைக் கூட்டமானது நேற்று (15.10.2025 - புதன் கிழமை) காலை 9.00 மணிக்கு மாவட்டச் செய லாளர், நாகர்கோவில் மாந கராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோ வில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமை கழக அலுவலகத் தில் வைத்து நடைபெற் றது.

நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலை வகித்தார்.

சிறப்புவிருந்தினர்களாக நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் சி.எஸ்.ஆனந்த், கன்னியா குமரி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ஸ்ரீதர் ரொட்ரிகோ கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் வருகின்ற சட்டமன்ற தேர் தலில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறுவதற்கு கழக நிர்வாகிகள் அனைவரும் பூத் களப் பணிகளை விரை வுபடுத்திட ஆலோசனை கள் வழங்கினார். மேலும், கூட்டத்தில் ஒன்றிய அர சின் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் எதிர் கொள்ளும் வகையில் கன் னியாகுமரி கிழக்கு மாவட் டத்தில் உள்ள அனைத்து பாக முகவர் களும் (BLA2) மேற்கொள்ள வேண்டிய பூத் களப்பணிக்கான புத்த கங்களை வழங்கினார்.

கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் எப்.எம். இராஜரத்தினம், மாவட்ட துணை செயலாளர்கள் கரோலின் ஆலிவர்தாஸ், பூதலிங்கம், ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.மதிய ழகன், மோ.பிராங்கிளின், த.செல்வன்,

பி.சற்குரு கண் ணன், ஏ.சுரேந்திர குமார், ஒன் றிய கழகப் பொறுப்பாளர் கள் ச.சுந்தர்சிங், ஜெ. மிலன், நகர கழக செயலா ளர் குமரி ஸ்டீபன், பகுதி கழக செயலாளர்கள் இ. ஜவகர், என்.பி.துரை, த.ஜீவா, எம்.சேக்மீரான், பேரூர், மாநகர வட்டக் கழக செயலாளர்கள் மற் றும் மாவட்ட, நாகர்கோ வில் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், பேரூர், மாநகர வட்டக் கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட, நாகர்கோவில் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டமானது மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களாக நாகர்கோவில் தொகுதி பார்வையாளர் சி.எஸ்.ஆனந்த், கன்னியாகுமரி தொகுதி பார்வையாளர் ஸ்ரீதர் ரொட்ரிகோ கலந்து கொண்டனர். கூட்டத்தில் எப்.எம்.இராஜரத்தினம், கரோலின் ஆலிவர்தாஸ், பூதலிங்கம், எம்.மதியழகன், மோ.பிராங்கிளின், த.செல்வன், பி.சற்குருகண்ணன், ஏ.சுரேந்திரகுமார், ச.சுந்தர்சிங், ஜெ.மிலன், குமரி ஸ்டீபன், இ.ஜவகர், என்.பி.துரை, த.ஜீவா, எம்.சேக்மீரான் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.